1989 மே 5]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வரி விதிப்பின்போது அடி நிலத்தின் மதிபபையும் கணக்கிடுகிறார்கள். கட்டிடத்தின் மதிப்பையும் மதிப்பிடுகிறார்கள். இதிலே அரசாங்கம் தெரிவிக்கிற விதிமுறையின் கீழ் பொது வரி, தெருவிளக்கு வரி, கல்வி வரி போன்ற இவைகளை எல்லாம் கணக்கிட்டு வரி சீரமைப்புக் குழு, டிவிஷன் ஆபீஸர்கள் இதிலே ஒரு முடிவுக்கு வந்து இந்த அளவுக்கு வரி கட்ட வேண்டும் என்று சொல்லி விதிக்கிறார்கள். இதுதான் இபபோது நடைமுறையில் இருந்து வருகிறது.

கண்டிராமாணிக்கம் கிராமத்தில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன்.

218 —(*வினா எண். 3445) திரு. கோ. வீரையன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்டிராமாணிக்கம் கிராமத்தில் 1988–89 ஆம் ஆண்டு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன் வழங்க தேர்வு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டிராமாணிக்கம் கிராமத்தில் 1988–89 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க 30 பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

(ஆ) தேர்வு செய்யபட்ட 30 பேர்களில் 11 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் இணைந்த கடன் 1988–89 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 30 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு மானியத்துடன் 11 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். மேலும் 15 பேர்களுக்கும் கடன் வழங்குவதற்கான மானியங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டு அந்த வங்கி, கடன் கொடுக்க மறுத்ததால் அந்த மானியம் திருப்பிக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

எனவே அப்படி தேர்வு செய்யப்பட்ட பிறகும் அரசாங்கம் கொடுக்கிற மானியத்தையும், கடனையும் பெற முடியாமல் போன பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டாவது—சென்ற ஆண்டு விடுபட்டுப் போனதால் இந்த ஆண்டாவது விட்டு விடாமல்—கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கடன் வழங்குகிற திட்டத்தின் அடிப்படையில் 30 பேர்கள் தேர்வு செய்து வைஸ்யா வங்கியின் கிளை மேலாளர் அவர்களுக்கு இந்த கடன் வழங்க பட்டியலை அனுப்பினார்கள். ஆனால் அவர்கள் 11 பேர்களுக்கு மட்டும் கடனை வழங்கிவிட்டு பிறகு மற்றவர்களுக்கு வழங்க இயலாது என்று கடைசி நேரத்திலே தெரிவித்துவிட்டார்கள். அதனாலேயே மற்றவர்கள் பயன் பெற முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. இதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் வந்திருக்கிறது. இதுபோன்று தேசியமயம் ஆக்கப்பட்ட வங்கிகள், சில நேரங்களில், கடைசி நேரங்களில், பரிந்துரை செய்யப்படுகின்ற கடன்களை வழங்காமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் வழங்கிவிட்டு எங்களால் அதற்குமேல் முடியாது என்று தெரிவிக்கின்றார்கள். இதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள சொன்னதுபோல, சென்ற ஆண்டு விடுபட்டுப் போனவர்களை மீண்டும் பரிசீலித்து, அவர்களுக்குக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30 பேர்களுக்கும் மானிய ஒதுக்கீடு செய்தும்கூட, 11 பேர்களுக்குத்தான் கடன் கிடைத்திருக்கிறது. மற்ற 19 பேர்களுக்கு அந்தக் கடன் கிடைக்க வேண்டியிருக்கிறது. எனவே, பரிசீலிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்டு, மானியமும் ஒதுக்கப்பட்டு அந்த நபர்களுக்கு இந்த ஆண்டு ஏப்ரல் 1-லிருந்து, 'ஏரியா ஆப்பரேஷன்' என்ற முறையிலே இந்தந்த வங்கிகளுக்கு இந்தந்த கிராமங்கள் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த காரணத்தினாலே கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற வங்கியின் மூலமாக முன்னுரிமை கொடுக்கப்பட்டு பாக்கி 19 பேர்களுக்கு கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்படி, சென்ற ஆண்டு விடுபட்டுப் போனவர்களுக்கு இந்த ஆண்டு முன்னுரிமை தந்து பரிசீலிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

1989 மே 5]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டிரா மாணிக்கம் பகுதி எங்களுடைய தொகுதியிலே அடங்கிய ஒரு கிராமமாகும். அங்கு தேர்வு செய்யபபட்ட 30 நபர்களுடைய பேர்களில் கடன் வழங்கப்பட்ட அந்த 11 பேர்கள் யார் யார்? விடுபட்டவர்கள் 19 பேர்கள். அவர்கள் யார் யார் விடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு இந்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து உடனடியாக கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் கேள்விக்கு, மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய வினாவில் பதில் சொல்லியிருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட 11 பேர்களை மட்டும் சொல்கிறேன். 30 பேர்களுடைய பட்டியலும் இருக்கிறது. அதைப் படிக்கத் தேவையில்லை. கொடுக்கப்பட்டவர்கள் பற்றி மட்டும் படிக்கிறேன். கோவிந்தராஜன், செண்பகவல்லி, சரோஜா, பாக்கியம், ராஜாபாதர், லட்சுமி, பஞ்சவர்ணம், மகாலட்சுமி, ஆறுமுகம், லட்சுமணன், ராமகிருஷ்ணன், ஆகிய 11 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

சித்தேரிப் பகுதியைத் தனி ஒன்றியமாக்கல்.

219—(*வினா எண். 3499) திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதிக்கு உட்பட்ட மலைவாழ் மக்கள் வாழும் சித்தேரிப் பகுதியை தனி ஒன்றியமாக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்திலிருந்து 80 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற சித்தேரி மலைவாழ்ப் பகுதி, 48 கிராமங்களைக் கொண்ட ஒரு பெரும் மலை சூழ்ந்த பகுதியாகும். அங்கே இருக்கின்ற மக்கள், அது தனி ஒன்றியமாக்கப்பட வேண்டும் என்று பல்லாண்டுகளாக கோரிக்கை வைத்து கடந்த கால ஆட்சியிலே அவைகள் நிறைவேற்றப்படும்,